முருகப்பெருமான் துணை

**மகான் அரிவாட்டய நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.06.2022**, சனிக்கிழமை

1. ஞானபலம் கொண்ட ராஜனே
ஞானியே ஆறுமுக அரங்கனே
தானதரும பலமும் தந்துமே
தரணி காக்கும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசிதனை
ஆசிபட சுபகிருது மிதுன திங்கள்
அறிவிப்பேன் லாபதிகதி காரிவாரம்
**(சுபகிருது வருடம் ஆனி மாதம் 11 நாள், 25.06.2022 சனிக்கிழமை)**
3. வாரமதில் அரிவாட்டய நாயனாரும்
வழங்குவேன் வையகம் சிறக்க
பாரதனில் சைவ உயர்நெறி
பழக்க வழக்கமாக பின்பற்றப் படவே
4. ஆகவே உலகம் தன்னில்
ஆன்மீக ஞான பலம் கூடி
வகைபட ஹிம்சை ஏதுமின்றி
வதை துன்பம் ஏதுமில்லா
5. இல்லாத வண்ணம் உலகினில்
எல்லா உயிர்கட்கும் பாதுகாப்பு
வல்லமைபட கிட்டி நன்கு
வையகமே அமைதி வளம் காணும்
6. காணவே தரும தவபலமிக்க
கருணை மிக்க ஞான தேசிகன்
ஞானமே உலகை மாற்றும்
நல் சக்தியாக எங்கும் பரவி
7. பரவி மக்களை தேற்றி
பண்பும் பரிபக்குவம் மிக்க
அறம் நிறைந்த தெளிவு கொண்ட
ஆற்றல் மிக்கவர்களாக மாற்றி
8. மாற்றியே பேருலகம் தானும்
மலர்ச்சி காணும் உண்மை வழி
மாற்றமாக தரும ஞான வழி
மாண்புகூடி வளர்ச்சிபெறும்
9. வளர்ச்சிதனை எல்லா வகையும்
வருங்கால வெற்றியாகக் கண்டு
தளர்வின்றி உலக மக்களும்
தன்னாய்வில் தேற்றம் கண்டு

10. கண்டுமே ஞானவான் ஆவர்
கந்தவேலன் ஆசி பெற்றநல்
தொண்டுவழி சேவை ஆற்றி
தேர்வு காண்பர் தேசிகன்வழி

11. தேசிகன் வழி ஞானிகளுமாகி
திருவருள்பட ஞானத்தலைமை
ஆசியுடன் ஞான ஆட்சிபுரிவர்
அருளிய அருளாசி முற்றே

–சுபம்–